**செ.வெ.எண்:16** **நாள்:07.10.2020**

# அரியலூர் மாவட்டத்தில் தூர்வாரப்படவுள்ள ஏரிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இஆப., அவர்கள் ஆய்வு செய்தார்கள்.

அரியலூர் மாவட்டம், நகராட்சிக்குட்பட்ட பகுதியிலுள்ள பொதுப்பணித்துறை நீர் வள ஆதாரத்துறையின் சார்பில் தூர்வாரப்படவுள்ள குறுஞ்சான் ஏரி, அரசன் நிலையிட்டா ஏரி ஆகிய ஏரிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் இன்று (07.10.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

**இந்த ஆய்வின் போது மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது:-**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் குடிமராமத்துத் திட்டம் அறிவிக்கப்பட்டு, நீர்நிலைகளில் தூர்வாரி, கரைகள் பலப்படுத்தப்பட்டு, கலுங்குகள் மற்றும் மதகுகள் சீரமைக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் வாயிலாக விவாசயிகளுக்கு விவசாய பணிகள் மேற்கொள்வதற்கு தேவையான நீர் ஆதாரம் உறுதி செய்யப்படுவதுடன், பொதுமக்களுக்கு தேவையான குடிநீர் கிடைப்பதற்கும் வழிவகை செய்யப்பட்டு வருகிறது.

அதன்படி, அரியலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளிலுள்ள குறுஞ்சான் ஏரி, அரசன் நிலையிட்டா ஏரி ஆகிய ஏரிகளை சீரமைத்து பொதுமக்களின் பயன்பாடிற்கு கொண்டு வரும் வகையில், மேற்கண்ட ஏரிகளில் உட்கட்டமைப்புகள் சீரமைக்கப்பட்டு, கருவேல மரங்களை அகற்றி, கரைகள் பலப்படுத்தும் பணிகள் உள்ளிட்டவைகள் மேற்கொள்ளவதற்கு ஏதுவாக பொதுப்பணித்துறை அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அதற்கான நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, பணிகள் கூடிய விரைவில் செயல்படுத்தப்பட பொதுப்பணித்துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தின் மூலம் குடிநீர் ஆதாரமான நிலத்தடி நீர் உயர்வதற்கும், விவசாயம் செய்வதற்கும், பொதுமக்கள் பயன்பாட்டிற்கும் இப்பணிகள் தொடங்கவுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வின்போது, செயற்பொறியாளர் (பொதுப்பணித்துறை) தட்சணாமூர்த்தி, உதவி செயற்பொறியாளர் வேல்முருகன், நகராட்சி ஆணையர் குமரன், வட்டாட்சியர் சந்திரசேகரன் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**